**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019 )

## C.C.No. 128/2022 P.W.3 Additional Witnesses

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ராபர்ட் சிங் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 13.03.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது வெள்ளிச்சந்தை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். மேற்படி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்த ராமஜெயம் மற்றும் உதவி ஆய்வாளர்கள் சுந்தர்மூர்த்தி, தங்கராஜா, மோகன் ஜோஸ்லின், பாஸ்கரன் ஆகியோர்களை நன்கு தெரியும். அவர்களின் கையொப்பம் மற்றும் கையெழுத்தை நன்கு அறிவேன். வழக்கின் தன்மை கருதி வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 19.02.2021 ம் தேதி 13.30 மணிக்கு தலைமை காவலர் நிலையப்பொறுப்பில் இருந்த போது நாராயணபெருமாள் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப்பெற்று மனுவின் தன்மைப்படி காவல்நிலையக்குற்ற எண். 25/2021 சட்டப்பிரிவுகள் 457, 380 இ.த.ச 1860ன் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளார். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை விசாரணைக்காக உதவி ஆய்வாளரின் பார்வைக்கு வைத்துள்ளார்.

3. மேற்படி வழக்கு கோப்பை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட அவர் 19,02.2021ம் தேதி 14.30 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 3 மற்றும் பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆகும்.** சாட்சிகளிடம் கையொப்பமும் பெற்றுள்ளார். வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபரான அனிஷ் ராஜன் என்பவர் 04.09.2021ம் தேதி 14.00 மணிக்கு தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் இரணியல் காவல் உதவி ஆய்வாளர் சுந்தரமூர்த்தி பதிவுச் செய்துள்ளார். பின்னர் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அத்தாட்சி மூலம் தடயப்பொருளை கைப்பற்றியுள்ளார். குற்றம் சுமத்தப்பட்ட நபர் சகிதம் படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின்**

**அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 5 ஆகவும், அத்தாட்சிகள் அ.சா.ஆ.6, 7 ஆகவும் குறியீடு செய்யபடுகிறது. அதற்கான படிவம் 91 அ.சா.ஆ. 8, 9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

5. பின்பு வழக்கினை தொடர்விசாரணைக்காக உதவி ஆய்வாளர் மோகன் ஜோஸ்லின் மற்றும் பாஸ்கரன் ஆகியோர்களை மேற்கொண்டு சாட்சிகளை விசாரணைச் செய்துள்ளார். இத்துடன் வழக்கின் விசாரணை முடித்து சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை** :

சம்பவயிடம் செல்லாமலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் புகார் மனுவினை முறைப்படி விசாரணை செய்யாமலும் நடக்காத சம்பவத்தை நடந்ததாக சித்தரித்து இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்ப்பும் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.